20.06.2025 S.C.No.138 of 2017 P.W.52 – Anandhakumar

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 to A5 present. A6 absent and his absence condoned as u/s.317 Cr.P.C. petition filed and allowed)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.00 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: உங்களது புலன் விசாரணையில் 19.06.2015 மாலை 16.30 hours க்கு ஷமீல் பாஷாவை ஆம்பூர் மருத்துவமனையில் சேர்த்தது யார்?

ப: கௌஷ் பாஷா, ஜகீர் அகமது, இர்பான் மற்றும் முகமது ஜலால்.

கே: மேற்கண்ட நால்வரும் இறந்து போன ஷமீல் பாஷாவுக்கு எவ்வாறு தொடர்பானவர்கள்?

ப: கௌஷ் பாஷா இறந்த ஷமீல் பாஷாவின் மாமனார் மற்றவர்கள் உறவினர்கள் ஆனால் என்ன உறவு முறை என்று தெரியாது.

கே: கௌஷ் பாஷாவை தவிர மீதி மூவரிடமும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: பதிவு செய்துள்ளேன்.

கே: அப்படியானால் அவர்கள் என்ன உறவுமுறை உடையவர்கள், எந்த தேதியில் விசாரணை செய்தீர்கள்?

ப: முகமது ஜலால்–ஐ 29.09.2015 அன்று விசாரணை செய்தேன்.

கே: முகமது ஜலால் என்பவர் இந்திய தவுகித் ஜமாத்தின் வேலூர் மாவட்ட செயலாளராக இருக்கிறேன் என்று உள்ளதா என்றால் ?

ப: உள்ளது.

கே: "எங்கள் ஜமாத்தில் ஆம்பூர் நகர தலைவராக உள்ள கௌஷ் பாஷா என்பவரின் மருமகன் ஷமீல் பாஷா" என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது

கே: மேற்கண்ட கௌஷ் பாஷா மற்றும் ஜலால் முகமது இருவரும் ஆம்பூர் நகர ஜமாத்தின் தலைவர் செயலாளராக இருப்பதனால் இருவரும் சேர்ந்து ஷமீல் பாஷாவை அடித்து ஆம்பூர் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள் என்பது குறித்து விசாரணை செய்தீர்களா?

ப: அது குறித்து விசாரிக்கவில்லை.

கே: When you have not recorded that Gouse Basha and Jalal Ahmed both are not relatives to Shameel Basha, do you agree?

ப: ஒத்துக்கொள்ள மறுக்கிறேன்.

கே: Show me the any record?

ப: ஆவணங்களில் இல்லை.

கே: ஆவணங்களில் பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: கௌஷ் பாஷா ஜமாத்தில் உள்ள உறுப்பினர் என்பதால் கௌஷ் பாஷா செய்த தவறை மறைக்க அந்த முஸ்லீம் அமைப்பினுடைய செயலாளர் மற்றும் இதர உறுப்பினர்களை துணைக்கு எடுத்துக்கொண்டு கௌஷ் பாஷா செய்த குற்ற செயலை மறைத்திருக்கிறார். அது தெரிந்தும் தாங்கள் முறையான விசாரணை செய்யவில்லை என்றால்?

ப: சரியல்ல.

கே: When a patient was admitted and AR recorded was made what is the duty of the Hospital?

ப: மருத்துவமனை உடனடியாக அந்த மருத்துவமனை அமைந்துள்ள காவல் நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

கே: 19.06.2015 அன்று 16.30 மணியளவில் ஆம்பூர் நகர அரசு மருத்துவமனை ஷமீல் பாஷா குறித்து யாருக்கு தகவல் சொல்லியிருக்க வேண்டும் என்றால்?

ப: ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் உள்ள மருத்துவர்கள் கொடுக்கும் தகவல்களை பதிவு செய்யும் பதிவேட்டை பார்த்தீர்களா?

ப: பார்வையிட்டேன்.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் உள்ள காவலர்களில் யார் யாரை கேட்டு விபத்து பதிவேடு தகவல் பெற்றதை குறித்து கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்தீர்கள்?

ப: என்னுடைய விசாரணை காலத்தில் மருத்துவமனை தகவல் பதிவேடு குறித்து சம்பந்தப்பட்ட காவலர்களை விசாரிக்கவில்லை.

கே: நீதிமன்றத்தில் உள்ள ஆவணங்களை பார்த்து தங்களுக்கு பின்னால் வந்த புலன் விசாரணை அதிகாரியாவது ஆம்பூர் நகர காவல் நிலைய காவலர்களை யார் ஷமீல் பாஷா குறித்து தகவல்களை பெற்று பதிவு செய்திருக்கிறார்கள் என்பதனை வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறார்களா ?

ப: நீதிமன்ற ஆவணங்களில் இது குறித்து ஆவணங்கள் எதுவும் இல்லை.

கே: When you are not verifieing the records of Ambur Town Police Station, regarding the AR, made in Ambur Government Hospital, have you taken any steps to verify the Pallikonda Police Station records ?

ப: I verified the Hospital intimation register regarding AR entry in Ambur Town Police Station and also at Pallikonda Police Station.

கே: Where you recorded that you have verified the register of hospital intimation for the above said two police stations?

ப: 10.07.2015 ம் தேதி என்னுடைய வழக்கு நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேன்.

கே: If so have you produced your Case diary before this court?

ப: வழக்கு நாட்குறிப்புகளை பொதுவாக நீதிமன்றத்திற்கு அனுப்புவதில்லை. நீதிமன்றம் கேட்கும்போது அதை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவோம்.

கே: Have you found any entry about the AR entry of Shameel Basha in the intimation register of both the police stations?

ப: ஆம்பூர் நகர காவல் நிலைய மருத்துவமனை தகவல் பதிவேட்டில் ஷமீல் பாஷாவின் விபத்து பதிவேடு பற்றி விவரங்கள் பதிந்துள்ளன.

கே: Who received that intimation according to the entry of the register?

ப: கையொப்பம் உள்ளது. யார் என்று தெரியவில்லை.

கே: According to the document (எ.த.சா.ஆ.4) who received the intimation from the Ambur Government Hospital?

ப: யார் தகவல் பெற்றார்கள் என்ற பெயர் விவரம் அதில் இல்லை. ஆனால் கையொப்பம் உள்ளது.

கே: Kindly tell immediatly after receipt of the hospital intimation regarding a assault and when the patient was alive what is to be done legally?

ப: மருத்துவமனை தகவல் கிடைத்தவுடன் குற்றம் நடந்த சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

கே: அப்படியானால் குற்றம் நடந்ததாக சொல்லப்படும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தின் பதிவேடுகளில் குறிப்பாக Hospital intimation register–ல் 19.06.2015 அல்லது அதற்கு பின்னிட்டு ஏதேனும் பதிவுகள் இருந்ததாக தாங்கள் ஆவணம் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: Hospital intimation register–ல் பதிவுகள் ஏதும் இல்லை. பொதுநாட்குறிப்பிலும் பதிவுகள் ஏதுமில்லை.

கே: When there is no entry regarding the AR in the hospital intimation register either in the Ambur Town Police Station or Pallikonda Police Station what is the duty of the investigation officer?

ப: தவறு யாரால் நடந்தது என்பது குறித்து விசாரிக்க வேண்டும்.

கே: Will you belive that the intimation from the Ambur Government hospital have been received by the Ambur Town Police Station and the Pallikonda Police Station?

ப: கண்டிப்பாக பெறப்பட்டிருக்கும்.

கே: Do you mean to say that the person who received the intimation from the Ambur Government hospital have concealed the information about the Shameel Basha?

ப: மருத்துவமனை தகவலை Conceal செய்தார்களா என்பது குறித்து நான் விசாரணை செய்யவில்லை.

கே: On 19.06.2015 who are the officials there working in Pallikonda Police Station (See the rough duty roaster and tell)?

ப: ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் சிங்காரம், சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி, சிறப்பு உதவி ஆய்வாளர் கலை, த.கா.257 த.கா.345, த.கா.2394, மு.நி.கா.3604 ஆகியோர் ஆஜரில் இருந்ததாக Rough duty roaster–ல் உள்ளது.

கே: மேற்கண்ட நபர்களிடம் விசாரணை செய்து ஆம்பூர் நகர அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் ஏதும் வந்ததா அதை யார் பெற்றது ஏன் Hospital intimation register–ல் எழுதவில்லை என கேட்டு பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: மேற்படி காவல் ஆளினர்களின் வாக்குமூலங்களில் மருத்துவமனை தகவல் குறித்து எந்த பதிவுகளும் பதியவில்லை.

கே: If somebody else received the Hospital intimation what is to be done by the concerned Police Station?

ப: மருத்துவமனை தகவல் பதிவேட்டில் பதிவு செய்துவிட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சம்பந்தப்பட்ட நபரிடம் வாக்குமூலம் பதிய வேண்டும்.

கே: Have you enquired any of the Police officials those who where on duty either in Ambur Town Police Station or Pallikonda Police Station regarding non obtaining statement from Shameel Basha?

ப: விசாரிக்கவில்லை.

கே: When there is a failure on the part of police officials in Pallikonda Police Station and Ambur Town Police Station on the point of recording statment from Shameel Basha about the occurance on him, how you have come to

a conclusion that Section 302 of IPC is attracted against the accused particularty on A1?

ப: சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் இ.த.ச.பிரிவு 302 வழக்கினை சேர்த்து அறிக்கை சமர்ப்பித்தேன்.

கே: You have recorded statement under section 161 of Cr.P.C. from 63 witnesses kindly see and tell who specifically stated the averements to attract section 302 of IPC?

ப: சாட்சி அலி அக்பர் தன்னுடைய வாக்குமூலத்தில் பள்ளிக்கொண்டா ஆய்வாளர் மார்டின் மற்றும் அவருடன் பணியாற்றிய மற்ற காவலர்களும் சட்டத்திற்கு புறம்பான காவலில் வைத்திருந்து அடித்து துன்புறுத்தியதால் இறந்துபோனார் என்று சொல்லியுள்ளார்.

கே: Whether any planning the commissioning was stated in this Section 161 of Cr.P.C. statment?

ப: No.

கே: Kindly see the section 161 of Cr.P.C. statment recorded by the first IO Govindhasamy from Ali Akbar and tell whether any averements regarding the ingredients of Sec.302 of IPC is available?

ப: No.

கே: Kindly tell, whether inquest report from the JM-3, Vellore was received before filing section alteration memo?

ப: No.

கே: When there is no averements regarding the Sec.161 of Cr.P.C. statement recorded from Ali Akbar by first IO Govindhasamy or yourself and inquest report was not received from concerned Magistrate, how you came to a

conclusion that Sec.302 of IPC is attracted?

ப: நான் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில்.

கே: மேற்கூறிய கேள்விக்கு உரிய பதில் அளிக்காமல் தாங்கள் செய்ய தவறிய செயலுக்காக தப்பிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தில் பொறுப்பில்லாத ஒரு பதிலை சொல்லி தப்பிக்க முயற்சித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: You already admitted that there is no any documents is shown that on 15.06.2015 Shameel Basha was brought to Pallikonda Police Station by the A1 and others under such circumstances you have filed a affidavit on 05.08.2015 by saying that on 15.06.2015 for an enquiry Shameel Basha was allegedly illegally. Kindly tell whether the above said date "15.06.2015 for an enquiry Thiru. Sahmeel Basha was allegedly illegally and brutally assaulted by Martin Premraj, Inspector of Police, Pallikonda Police Station" is available in last four lines ?

ப: Yes. அந்த ஆவணம் எ.த.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கே: Sir do you agree that the deceased Shameel Basha was concious and alive on 19.06.2015 16.30 hours?

ப: Yes.

கே: I say it must be the duty of the first investication officer who received the hospital intimation to record the statement of occurance from the Shameel Basha and that must be recorded in writting in the particular police station and his statement must be taken as a complaint and FIR is to be filed ?

ப: Yes.

கே: In your investication have you found any statement after taken the Shameel Basha by his father in law on 19.06.2015 01.00 hours by giving bind over memo?

ப: No. I have not found.

கே: On 01.07.2015 you taken this investication in FIR No.158/2015 on the file of Pallikonda Police Station, have you taken any steps to collect the medical records from Ambur Government Hospital?

ப: 06.07.2015 ம் தேதி இவ்வழக்கில் ஷமீல் பாஷா சிகிச்சை பெற்ற ஆம்பூர் மருத்துவமனை மருத்துவ அதிகாரிக்கு ஷமீல் பாஷா சிகிச்சை சம்பந்தமாக ஆவணங்களை தருமாறு கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது.

கே: Have you received original documents or attested copy documents from Ambur Government Hospital?

ப: Original documents received.

கே: From the Medical documents received from Ambur Government hospital, have you found any absconding note of Shameel Basha?

ப: Yes.

கே: What action you taken to find out the truth of the absconding?

ப: அது பற்றி நான் விசாரிக்கவில்லை.

கே: If any absconding of in-patient is there in any hospital particularly there is an alligation against somebody what is the action to be taken by the investication officer?

ப: தலைமறைவான தகவல் கிடைத்தவுடன் மருத்துவமனை சார்ந்த காவல் நிலையத்தில் விசாரிக்க வேண்டும்.

கே: Have you enquired with the hospital authorities and which circumstances the Shameel Basha was absconded when there is a guard in in–patient ward?

ப: அது குறித்து விசாரிக்கவில்லை.

கே: Have you enquired from which date & hour to which date & hour Shameel Basha was absconded?

ப: அது குறித்து விசாரிக்கவில்லை.

கே: Have you discussed with the DSP Ganesan about the absconding of Shameel Basha from Ambur Government hospital?

ப: DSP Ganesan அவர்களிடம் இது குறித்து நான் விவாதிக்கவில்லை

கே: Do you know that DSP Ganesan have received the copy of the Medical documents from Ambur Government hospital?

ப: அது பற்றி எனக்கு தெரியாது.

கே: You know very well that Ganesan DSP have received the copy of the Medical documents as there was an allegation against the Pallikonda Police Inspector but now you are escaping from the clutches of knowing the truth of collection of copy of medical documents by saying "I don't know" what is your reply?

ப: என்று சொன்னால் சரியல்ல.

கே: When you are receiving the Medical document from Ambur Government hospital have you recorded any statement from the particular doctor towards the entry of absconding from in–patient ward?

ப: மருத்துவர் சரவணக்குமார் என்பவரை விசாரித்துள்ளேன். அவரது வாக்குமூலத்தில் Absconding குறித்த தகவல் எதையும் சொல்லவில்லை.

கே: Do you mean on the day of recording statement from Dr.Saravanakumar there was no such entry of absconding in the medical documents and therefore the said doctor have not stated about the absconding of Shameel Basha?

ப: No. அவ்வாறான அர்த்தத்தில் நான் எடுத்துக்கொள்ளவில்லை. நான் விசாரிக்கும்போது Medical documents-ஐ பெறவில்லை.

கே: When you recorded the statement of Dr.Saravanakumar?

ப: 03.07.2015.

கே: When you receive the document?

ப: 06.07.2015.

கே: Have you enquired after 06.07.2015 with Dr.Saravanakumar about the absconding note available in the medical documents?

ப: No.

கே: Will you agree that it is the mandatory duty of the investication officer to enquire and record the details of absconding from the in-patient ward?

ப: Yes.

கே: It is mandatory duty of the investication officer from which hour to which hour the in-patient Shameel Basha was absconding from the in-patient ward have you investication to that effect?

ப: No.

கே: It is mandatory duty of an investication officer to find out under whose control the said Shameel Basha was there during the period of absconding?

ப: Yes.

கே: Have anybody stated where the said Shameel Basha was there during the period of absconding?

ப: No one have stated.

கே: It is not brought to the notice of this court under whose control the Shameel Basha was there during the period of absconding do you agree?

ப: அது குறித்து நான் விசாரிக்காததால் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவில்லை.

கே: During the period of absconding if anything was happened to Shameel Basha who was responsible for the injuries was excess than the AR?

ப: தலைமறைவான காலத்தில் அவர் யாருடன் இருந்தாரோ அவர்தான் பொறுப்பு.

கே: அப்படியானால் ஷமீல் பாஷா 19.06.2015 இரவு முதல் 20.06.2015 மாலை 04.00 மணி வரை எவருடன் இருந்தார் என்று தங்கள் விசாரணையில் தெரிய வந்தது?

ப: அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

கே: You have admitted that you have inspected the hospital intimation register of Ambur Town Police Station, what type of action you have taken on the note available in the hospital intimation register ( எ.த.சா.ஆ.4)?

ப: நடிவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை.

கே: Kindly see the Document Ex.D4 and tell what is the date of admission shown in the register?

ப: 20.06.2015 11.00 AM

கே: Is it in the entry made in intimation register of Ambur Town Police Station about the date and time of admission is true?

ப: உண்மை அல்ல.

கே: Kindly see one "Mr.Selvam SSI of Ambur Town Police Station have received the intimation on 20.06.2015 11.30 hours" have you recorded any statement from the SSI Selvam?

ப: வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

கே: Kindly see Ex.D4 the 6th column it is written Ambur Town Police Station and cut it then in the bottom it is written Pallikonda Police Station do you agree?

ப: Yes.

கே: Have you enquired and recorded any statement regarding the correction made in the 6th column of Ex.D4?

ப: வாக்குமூலம் எதையும் பதிவு செய்யவில்லை.

கே: I say, during the absconding period of 19.06.2015 to 20.06.2015 evening 04.00 hours where the Shameel Basha was residing and whose control the said Shameel Basha was there is not investicated?

ப: அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

கே: Have you enquired with the incharge police officer of Ambur Town Police Station or Pallikonda Police Station regarding the point of the filing of FIR for absconding?

ப: அதைப்பற்றி நான் விசாரிக்கவில்லை.

கே: Kindly tell one person was absconding from in-patient medical treatment and thereafter he return back to the hospital, what would be done by the hospital and the Police?

ப: அவரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.20 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.06.20 17:31:19 +0530